**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 1, இதழ் 1, 2020**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம் : http://restpublisher.com/book-series/ctll/**

# சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் இடம்பெறும் வாழ்வியல் முறைகள்

**வ.ஜெயபார்வதி,**

**தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம், இராமாபுரம், சென்னை -600 089**

## 1. முன்னுரை

மனிதர்கள் ஒரே பெயரில் அழைக்கப்பட்டாலும் அவர்களுக்கிடையே தோற்றத்தாலும், பண்பிலும் வேறுபாடு காணப்படுவது போல தமிழில் தற்கால இலக்கியங்கள் என்று அழைக்கப்பட்டாலும் ஒன்றுக்கொன்று அவ்விலக்கியங்கள் தனித்தன்மை கொண்டு விளங்குகின்றன. இதில் கவிதை, புதுக்கவிதை, சிறுகதைகளை விட வாழ்வில் நடக்கும் அத்தனை செய்திகளையும் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பதிவு செய்யக்கூடியதாக புதினங்கள் அமைகின்றன. புதினங்கள் பல்வேறு வகைப்படும். நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தமிழ்ச்செல்வியின் புதினங்கள் கிராமப்புறத்தையே, கதைக்களமாக கொண்டு அமைகின்றது. சு.தமிழ்ச்செல்வியின் புதினங்களில் இடம்பெறும் கதைமாந்தர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக பெண்களின் வாழ்வியல் சிக்கல்களை தனது புதினங்களில் தெளிவாக விளக்கியுள்ளார். இவரது புதினங்களில் படைக்கப்பட்ட பெண்களின் வாழ்வியல் முறைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மனிதனின் அடிப்படை தேவைகளாக சொல்லப்படுவது உணவு, உடை, உறைவிடம். இந்த தேவைகளுக்காக கூட திண்டாடக்கூடிய அளவிலேயே பெண்களை படைத்துள்ளார் சு.தமிழ்செல்வி. இத்தகைய பெண்களின் உணவு முறைகள், தொழில், நம்பிக்கை, கல்வி, திருமணம் முதலியவற்றைப் பற்றி சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் வழி நாம் ஆராய்வோம்.

## 2. கல்வி

உலக அறிவு குறித்த பல அனுபவங்களை பெற மனிதனுக்கு அவசியமான ஒன்று கல்வி. ஆனால் அக்கல்வியின் முக்கியத்துவத்தை அறியாத மக்களாகவே சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் பெண்கள் படைக்கப்படுகிறார்கள். கற்றாழை புதினத்தில் வரும் மணிமேகலை படிப்பின் மீது மிகுந்த ஆர்வம் உடையவளாக இருக்கிறாள். தானே உழைத்து படிக்க முன் வந்த போதும் அவளின் தந்தை அவளுக்கு சைக்கிள் கடை வைத்து தருகிறார் என்பதை, “காற்றடித்து குடுப்பதோடு, பஞ்சர் ஒட்டவும், வீல் பென்ட் எடுக்கவும், டயர் டீயூப் மாற்றவும் மணிமேகலைக்கு சண்முகமே கற்றுக் கொடுக்கிறார்”. (சு.தமிழ்ச்செல்வி, கற்றாழை ப. 38) என்னும் வரியின் மூலம் மணிமேகலையை படிக்க வைக்க விருப்பம் இல்லை என்பது புரிகிறது. தங்களின் வறுமை காரணமாகவே குழந்தைகளை அன்று பள்ளிக்கு அனுப்ப விரும்பினர். அதற்குக் காரணம் அன்று மதிய உணவு பள்ளிகளில் கொடுக்கப்பட்டது. இக்கருத்தை மாணிக்கம் புதினத்தில் ஆசிரியர் விளக்குகிறார். வாணியும் மணியும் தட்டை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு செல்கின்றனர். காரணம் மதியம் கோதுமை சோறு போடுவார்கள் என்று கிளம்புகின்றனர். ஆகவே கல்வி கற்பதற்காகவே மட்டும் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவில்லை என்பதை நாம் அறியலாம்.

## 3. திருமணம்

பெண் என்பவள் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஆணைச் சார்ந்து வாழவேண்டும் என்பது சமூக நீதிகளில் ஒன்றாக விளங்குகிறது. பிறந்தது முதல் தந்தைக்கு கட்டுப்பட்டும் வளர்ந்த பிறகு கணவனுக்கு கட்டுப்பட்டும், வயதான பிறகு மகனுக்கு கட்டுப்பட்டும், வாழும் சார்பு வாழ்க்கையே பெண்களுக்கு நிரந்தரமானது. இக்கருத்தையே

சு.தமிழ்ச்செல்வி புதினங்கள் விளக்குகின்றன. ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது பெண் வீட்டார் உடைய கடமையாக கருதப்படுகிறது. திருமணத்தின்போது பெண்ணுக்கு சீதனம் வழங்கப்பட்டுள்ளது. கீதாரி புதினத்தில் “ஆத்தா அப்பன்கிட்ட இருந்து பத்தாடு பிரிச்சி ஓட்டிகிட்டு வந்திச்சி அந்தத் தம்பி, நாங்க ஒரு நாப்பதாடு பெண்ணுக்கு சீதனமாக ஓட்டிவுட்டம்”. (சு.தமிழ்ச்செல்வி கீதாரி, ப.52) என்ற வரிகள் மூலம் பெண்ணுக்கு சீதனம் வழங்கப்பட்டதை அறியலாம். அதுமட்டுமல்லாமல் மணமகன் இல்லாவிட்டாலும் இடையர்கள் மணமகனின் தடிக்கம்பை வாங்கி கொண்டு வந்து அதற்கு தலைப்பாகை அணிந்து மாப்பிள்ளை இடத்தில் அதனை வைத்து திருமணத்தை நடத்தி உள்ளனர். மணமகள் இல்லாமல் திருமணம் நடந்த முறையை கீதாரி நாவல் மூலம் அறியலாம். மேலும் இளம்பெண்ணுக்கு முதியவரை திருமணம் முடித்து கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. அளம் புதினத்தில் ஒரு பெண் தன்னை முதியவருக்கு மணம் முடித்து வைக்க, திருமணம் முடிந்த மூன்றே மாதத்தில் கணவர் இறந்துவிட தாய்வீடு திரும்புகிறாள். மறுமணம் என்பது ஆண்களுக்கு வரமாக அமைந்து விடுகிறது. ஆனால் கணவனை இழந்த பெண்ணுக்கு மறுமணம் என்பது வயதானவர்களை பார்த்துக்கொள்ளவும் நோயினால் துன்பப் படுபவர்களை பார்த்துக் கொள்ளவும் அமைகின்றது. அளம் புதினத்தில் வடிவாம்பாளை காக்கா வலிப்பு நோயுள்ள ஒருவருக்கு திருமணம் முடித்து வைக்கின்றனர். ஆண் வேலை நிமித்தமாகவோ வேறு விஷயமாகவோ சென்று வீடு திரும்பவில்லையென்றாலும் அந்தப் பெண் அந்த வீட்டிலேயே வாழ்வதுதான் ஒழுக்க முறையாகவும் அமைகிறது.

## 4. தொழில்

கிராமப்புறங்களில் பொதுவாக அனைத்து பெண்களும் வேலைக்குச் செல்பவர்களகவே உள்ளனர். அதிலும் சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் இடம் பெறும் பெண்கள் அனைவரும் உழைக்கும் வர்க்கமாகவே படைக்கப்பட்டுள்ளனர். பல நேரங்களில் இவர்கள் பெரும் பணமே இவர்கள் குடும்பத்தின் உணவாக மாறுகிறது. பெண்கள் தங்களின் அடிப்படை தேவைகளான உடை, பாத்திர பண்டங்கள், எண்ணெய் போன்ற பிற அனைத்து தேவைகளுக்கும் தங்களின் உழைப்பில் இருந்தே கிடைக்கும் கூலியை கொண்டே நிறைவேற்றிக் கொள்கின்றனர். இச்செய்தியை மாணிக்கம் புதினம் மூலம் நாம் அறியலாம். கற்றாழை புதினத்தில் மணிமேகலை என்ற பெண் கதாபாத்திரத்தை ஆணுக்கு நிகராக வேலை செய்பவராக படைத்துள்ளார் தமிழ்ச்செல்வி. இவ்வாறு ஆணுக்கு நிகராக எல்லா வேலையையும் செய்த பொழுதும் கூட கூலி அவ்வாறு கிடைப்பதில்லை. ஆண்களை விட குறைவான அளவே கூலி வழங்கப்படுகிறது. இதற்கு ஆணாதிக்கம் உணர்வே காரணம் என்ற முடிவுக்கு நம்மால் வரமுடியும் .

## 5. இருப்பிடம்

ஆதிகால மனிதன் தன்னை பாதுகாத்துக்கொள்ள கற்குகை, மரப்பொந்துகளில் வாழ்ந்தான். பின்பு நாகரீக காலத்தில் வீடுகளை ஏற்படுத்தி வாழ ஆரம்பித்தான். இந்த வீடுகள் மக்களின் பொருளாதார ஏற்றத்தாழ்விற்கேற்ப அமைகிறது. முதலில் நாடோடியாக மனிதன் வாழ்ந்த பொழுது நிரந்தரக் குடியிருப்புகளை அவனால் கட்ட முடியவில்லை. கீதாரி புதினத்தில் இடையர்கள் தங்களது ஆடுகளை பாதுகாத்துக்கொள்ள கிடை போடும் இடத்திலேயே தங்கினார்கள். அப்போது, “காட்டில் கிடந்த சூராங்கழி, ரெட்டளாங்கழி, மூங்கில் கழி இவற்றை வளைத்து கூண்டு கட்டிக்கொண்டார்கள். பனை மட்டையை வெட்டி செறவு பிடித்து கூண்டிற்குள் போட்டு ஆளுக்கு இரண்டு மூன்று கூண்டுகள் கட்டி கொண்டார்கள்” (சு.தமிழ்ச்செல்வி, கீதாரி, ப. 146) என்ற வரிகள் மூலம் அறியலாம். இவர்களின் கூண்டு தேங்காயை சரிசமமாக உடைத்தது போல இருக்கும். ஊர் மாறிச் செல்லும் போது, இதனை பிரித்து அனைத்துப் பொருள்களையும் பெண்களே தூக்கிக் கொண்டு செல்வார்கள். இதற்கு வலசை என்று பெயர். இந்த வலசை புயல் காற்றே அடித்தாலும் சேதம் அடையாது. அடுத்ததாக அளம் புதினத்தில் பெண்கள் இயற்கை சீற்றங்களால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இருப்பிடங்களான மாட்டுக் கொட்டகை, குடிசைகளில் வாழ்கின்றனர். மனிதனாலும், இயற்கையாலும் ஏற்படும் அத்தனை துயரங்களையும் தாங்கிக் கொள்ளும் பெண்களையே தனது படைப்பாகப் படைத்துள்ளான் ஆசிரியர்.

## 6. உணவு

மனிதன் உயிர் வாழ தேவையான ஒன்று உணவு. நமது சமுதாயத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மனிதர்களுக்கு உணவு என்பதே கேள்விக்குறியாக உள்ளது. சு. தமிழ்ச்செல்வி படைப்புகளில் காணப்படுகின்ற மாந்தர்களின் உணவு முறை மிகவும் சாதாரணமாகவே உள்ளது. கீதாரி நாவலில் மந்தையில் இறந்து போகும் ஆடுகளின் கறியை உப்பும், விளக்கெண்ணையும் ஊற்றி பிசைந்து, நீண்ட நைலான் கயிற்றில் கோணி ஊசியால் ஒவ்வொரு துண்டாய் கோர்த்து, வெயிலில் நன்றாக காயவைத்து கொள்வார்கள். அதேபோல் குழம்பிற்கு தேவையான மசாலாக்களை ஒரு வாரத்திற்கு மொத்தமாக அரைத்து வைத்துக் கொள்வார்கள். மாணிக்கம் நாவலில் செல்லாயி உணவு இல்லாத காலத்தில் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதற்காக கீரை விதையை சேமித்து வைக்கிறாள் என்பதன் மூலம் கீரை விதைகளை கூட உணவாகப் பயன்படுத்தியதை அறியலாம். அளம் நாவலில் சுந்தராம்பாள் தனது குடும்பத்தினருக்கு முக்கிய நாட்களில் தான் சர்க்கரை சோறும், காராமணி பயிறும், வடையும் உணவாக தருகிறாள். மீதி நாட்களில் கிழங்கு வகைகளையும், கொட்டை வகைகளையும் உணவாக பயன்படுத்துகின்றனர்.

## 7. சடங்கு முறைகள்

ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரையில் பல விதமான சடங்குகள் நடத்தப்படுகின்றன. குழந்தை பிறந்த பதினாராம் நாள் “மோட்னிச்சா கும்பிடு” என்ற ஒரு சடங்கு முறை செய்யப்படுகிறது. தாய் எந்த சிக்கலும் இன்றி பிள்ளையையும் பெற்று எடுத்த உடன் பெரியாச்சி என்ற பெண் தெய்வத்திற்கு பூஜை செய்கின்றனர். இந்த வழிபாட்டிற்கு ஆண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அதன் பின்பு குழந்தைக்கு புதுதுணி உடுத்தி பெயர் சூட்டப்படுகிறது என்பதனை மாணிக்கம் புதினம் மூலம் அறியலாம். கீதாரி புதினத்தின் வழி பூப்புச் சடங்கு அறியலாம். பூப்படைந்த பெண் 16 நாட்கள் வரை ஆண்கள் முகத்தில் விழிக்க கூடாது. பச்சை விரியோலை மட்டை கட்டி அதற்குள்ளே பெண்ணை உட்கார வைக்கின்றனர். உணவாக களி குடுக்கிறார்கள் பதினாறாம் நாள் தலைக்கு தண்ணீர் ஊற்றி புது துணி எடுத்து உடுத்தச் சொல்லி சடங்கை நிறைவு செய்கின்றனர். அளம் புதினத்தில் பொன்னையன் சாக கிடக்கும் போது, அவனது மூன்று அக்காக்களும் ஆசை அடங்க சடங்கு செய்கின்றனர். இறந்த பின் 16 நாள் இறப்புச் சடங்கு செய்கின்றனர் .

## 8. மருத்துவம்

பெண்கள் பெரும்பாலும் கை வைத்தியமாகவே தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு மருந்து கொடுத்து கொள்கின்றனர். கற்றாளை புதினத்தில் மணிமேகலையை பூனை கடித்த பொழுது பூனை கடிக்கு வைத்தியம் கூறப்படுகிறது. அளம் புதினத்தில் சுத்தரம்பாள் பலாப் பழம் பறிக்க மரத்தில் ஏறியபோது சிவப்பு எறும்பு கண்ணில் விழுந்து விடுகிறது. முதலுதவியாக தனது சேலை முந்தானையை வாயில் வைத்து கண்ணில் வைக்கிறாள். மேலும், கண்ணில் தாய்ப்பால் ஊற்றி எரிச்சலை அடங்க செய்கிறாள். மாணிக்கம் புதினத்தில் பிள்ளைபேறு மருத்துவம் பற்றி தெளிவாக விளக்கப்படுகிறது.

## 9. உடை

மனிதனின் மானத்தை காக்க இன்றியமையாத தேவையாக பயன்படுவது உடை. சு.தமிழ்ச்செல்வி எழுதிய நாவல்களில் இடம்பெறும் பாத்திரங்கள் பெரும்பாலும் ஏழைகளே, இவர்களுக்கு உடுத்துவதற்கு கூட தேவையான அளவு உடையில்லை என்கிறார் ஆசிரியர். அளம் புதினத்தில் வடிவாம்பாள் தன் தந்தையிடம் மேல்சட்டை வாங்கி வரும்படி கேட்கிறாள். அதேபோல் பூப்படைந்த தன் பெண்ணுக்கு கட்டிக்கொள்ள ஒரே பாவாடைதான் உள்ளதே, அதனையும் சடங்கு முடிந்தவுடன் வண்ணாத்தியிடம் தீட்டு துணியை போட வேண்டுமே என்று கவலைப்படுகிறார். இவரது நாவல்களின் வாயிலாக ஏழை மக்கள் இன்றியமையாத தேவையான உடை கூட இல்லாத நிலையில் இருப்பதை அறியமுடிகிறது.

## 10. வழிபாடு

கிராமங்கள் பொதுவாக சிறு தெய்வ வழிபாடு அதிகம் காணப்படுகிறது. அளம் புதினத்தில் நொண்டி வீரன் என்ற சிறு தெய்வத்தை வழிபடுகின்றனர். நொண்டி வீரனுக்கு சிலை கிடையாது. ஒரு பெரிய திடலில் உள்ள பூவரசு

மரத்தைதான் நொண்டி வீரனாக நினைத்து பெண்கள் தங்கள் மனக்குறையை அவனிடம் கூறினார். அது நிச்சயம் நடக்கும் என்றும் நம்பினர். கற்றாழை புதினத்தில் வெள்ளம் வந்தபோது தங்களை காப்பாற்றிய சிறுமியையே படா முனியம்மாவாக நினைத்து வேண்டிக் கொண்டனர். வேண்டுவோருக்கு ஒரு தீங்கும் நேராது என நம்பினார். மாணிக்கம் புதினத்தில் கள்ளிக்குடி மரித்தியம்மனை தெய்வமாக வழிபட்டனர். மீனவர்கள் தெற்கத்திமுனி என்ற கடவுளை வழிபட்டனர். மூன்று குச்சிகளை இணைத்த உருவமே தெக்கத்தி சாமி என்று அழைத்தனர். இதன் மூலம் சிறு தெய்வ வழிபாடு பெண்களிடம் இருந்ததை அறிய முடிகிறது.

## 11. முடிவுரை

சு.தமிழ்ச்செல்வி புதினங்களில் காணப்பெறும் கிராமத்துப் பெண்கள் அனைவரும் கல்வி அறிவு பெறாத நிலையில் கூட துணிவுடன் வாழ்க்கையை எதிர் கொள்கிறார்கள். உணவிற்காக கஷ்டப்பட கூடிய நிலையில் கூட மனம் தளராமல் வறுமையை எதிர்த்து நின்று போராடும் குணம் படைத்தவர்களாக உள்ளனர். கணவன் கைவிட்டு சென்றபோது அவன் வருவான் என்ற நம்பிக்கையுடன் பிறர் உதவியை எதிர்பாராமல் உழைத்து வாழ்கிறார்கள். கணவன் மட்டுமல்லாமல் அவனுடைய சுற்றத்தாராலும் துன்பப்பட்டாலும் தன் குழந்தைகளை காப்பாற்ற வேண்டும் என்று போராடுகின்றனர். சு.தமிழ்ச்செல்வி நாவலில் இடம்பெறும் பெண்கள் வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டாலும் பீனிக்ஸ் பறவை போன்று சமுதாயத்தை எதிர்கொண்டு மனம் தளராது ஒரு புதிய உலகத்தை வரவேற்கும் நம்பிக்கை நாயகிகளாக தான் திகழ்கிறார்கள்.

## துணைநூற்பட்டியல்

[1]. சு.தமிழ்ச்செல்வி, அளம் நாவல், மருதா பதிப்பு வெளியீடு, 10, ரயில்வே ஸ்டேஷன்ரோடு, எடமலைப்பட்டி புதூர், திருச்சி 620 012.

[2]. சு.தமிழ்ச்செல்வி, கீதா நாவல், மருதா பதிப்பக வெளியீடு, 226, பாரதிசாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014.

[3]. சு.தமிழ்ச்செல்வி, கற்றாழை நாவல், மருதா பதிப்பக வெளியீடு, 226, பாரதிசாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014.

[4]. சு.தமிழ்ச்செல்வி, மாணிக்கம் நாவல், நீயூ செஞ்சூரி புக் ஹவுஸ், 41.பி சிட்கோ இண்டஸ்டிரியல், அம்பத்தூர், சென்னை – 98.